பொது சுற்றுநிரூப இல : 01 - 03 /2016
எனது இலக்கம் : DDG /DS/80/15

சுகாதார செயலாளர்,
சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
385,வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு – 10.

2016. 01. 25

சகல,
மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர்கள்,
மாவட்ட சுகாதார சேவைப்பணிப்பாளர்கள்,
பிராந்திய பல் வைத்தியர்கள்,
சுகாதார வைத்திய அதிகாரிகள்,
போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
நிறுவனத் தலைவர்கள்.

<u>உலக வாய் சுகாதார தினம் - 2016 மார்ச், 20</u>
<u>"ஆரோக்கியமான சரீரத்தின் ஆரம்பம் ஆரோக்கிய வாய்"</u>

சர்வதேச பல் வைத்திய சங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இம்முறை 2016 மார்ச், 20 ஆம் திகதியில் நடைபெறவுள்ள உலக வாய் சுகாதார தினத்தின் தொனிப்பொருள் "ஆரோக்கியமான சரீரத்தின் ஆரம்பம் ஆரோக்கிய வாய்" என்பதாகும்.

சுகாதார அனமச்சு மற்றும் இலங்கை பல் வைத்திய சங்கத்துடன் இணைந்து இம்முறை தேசிய மட்டத்தில் நிகழ்ச்சிகளை 2016 மார்ச் 17 ஆந் திகதி நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது "ஆரோக்கியமான சரீரத்தின் ஆரம்பம் ஆரோக்கிய வாய்" எனும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு அதன் அர்த்தத்தை சமூகத்திற்கு உணர்த்தும் வகையில் ஆரோக்கிய வாழ்க்கைக்கு வாய் சுகாதாரத்தின் முக்கியத்துவம் பற்றிய நிகழ்ச்சிகளை திட்டமிட்டு செயற்படுத்தப்படல் வேண்டும்.

அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படும் போது,

1. 2016 மார்ச், 17 ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்கு உலக சுகாதார தினத்தின் தொனிப் பொருளை நோக்கிய காத்திரமான நடவடிக்கைகளை நிறுவவும், அமுல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2. இந்த நடவடிக்கைகளை நிறுவும் போது பிராந்தியத்தில் சேவை செய்யும் பல் வைத்தியர்கள் தமது மாவட்டத்திலுள்ள இதற்காக அக்கறை செலுத்துவோரின் கருத்துகள், முன்மொழிவுகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த வேலைத்திட்டம் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

3. சகல நிறுவனத் தலைவர்களும் இந்த வேலைத்திட்டத்திற்கு சுகாதார சேவை ஊழியர்கள் பங்கேற்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

முன்மொழிந்த நடவடிக்கைகள்

1. நடமாடும் வாய் சுகாதார கிளினிக் பிரதான ஒன்பது மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் பிரதான ஒன்பது நகரங்களில் மற்றும் பிரதேச மட்டத்தில் தேவைக்கேற்ப
2. ஊடகங்கள்
3. பெனர் - உலக வாய் சுகாதாரத் தினத்தின் தொனிப்பொருளைக் கொண்ட பெனர்கள் சுகாதார நிறுவனங்களில் காட்சிப்படுத்தல்
4. சகல சுகாதார நிறுவனங்களிலும் வாய் சுகாதார தகவல் அடங்கிய போஸ்டர்கள் 2016 பெப்ரவரி நடுப்பகுதியிலிருந்து காட்சிப்படுத்தல்
5. துண்டுப்பிரசுரங்கள் மூலம் மக்களை தெளிவூட்டல்
6. உடற்பயிற்சி மேம்பாட்டு செயற்பாடுகள் - பாடசாலை/ முன்பள்ளிப்பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.
7. வாய் சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் - பாடசாலை/ முன்பள்ளிப்பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.
8. பாடசாலை பிள்ளைகளுக்கு முறையாக பல் துலக்கும் முறையினை அறிமுகப்படுத்தி கண்காணிப்பு நடைமுறைப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

இதற்கு மேலதிகமாக இந்த வருடத்தின் உலக வாய் சுகாதார தொனிப்பொருளுக்கு பொருத்தமான எம்முறையிலும் வாய் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் உங்களது பகுதியில் ஏற்பாடு செய்து செயற்படுத்த முடியும்.

முன் மொழியப்பட்ட இலக்குக்குழு

1. கர்ப்பிணித்தாய்மார்கள்
2. 02 வயதிற்குக்குறைந்த பிள்ளைகள்
3. முன்பள்ளி பாடசாலை / பாடசாலைப் பிள்ளைகள்
4. தொழில்சார் குழுக்கள்
5. முதியோர்கள்
6. சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள் உட்பட விஷேட தேவையுடைய சமூகம்

வைத்தியசாலைகளில் நிகழ்த்தப்படவுள்ள நிகழ்ச்சிகள் வைத்தியசாலையின் சுகாதார கல்வியை மையமாகக் கொண்டு சகல வாய் சுகாதார உத்தியோகத்தர்களினதும் பங்களிப்புடன் நடாத்தப்பட வேண்டும். அத்துடன், திட்டமிட்டுள்ள வெளிக்கள நிகழ்ச்சிகளுக்கு சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். இம் மாத்திற்குள் செயற்படுத்தப்படுகின்ற வாய் சுகாதார தினத்திற்கு உரிய சகல நிகழ்ச்சி திட்டங்களின் விபரங்கள் பிராந்திய பல் வைத்தியர் உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன், பிரதியொன்றை பிரதிப்பணிப்பாளர் நாயகம் (பல் சேவை) பிரிவிற்கு அனுப்பப்படல் வேண்டும்.

வைத்தியர் J.M.W ஜயசுந்தர பண்டார
ப. க. சுகாதார சேவைப்பணிப்பாளர் நாயகம்.